# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

2038 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

### பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகளுக்கும் பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் மேற்படி வர்த்தமானியைப் பார்க்கவும்**

**ஆரம்ப தர வைத்திய உத்தியோகத்தர்களுக்கும் பல் சத்திர சிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்களுக்குமான திணைக்களப் பரீட்சை – 2017, செத்தெம்பர்**

2014.10.11 ஆந் திகதிய 1883/ 17 ஆம் இலக்கம் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள சுகாதார சேவையின் வைத்திய உத்தியோகத்தர்கள் தொடர்பான நியதிச் சட்டக்கோவையின் 8 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் ஆரம்ப தர வைத்திய உத்தியோகத்தர்கள் II ஆம் தரத்திற்கு உயர்த்தப்படுவதற்கு முன்பும், பல் சத்திர சிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்கள் தமது சேவையில் உறுதிப்படுத்துவதற்கு முன்பும், நிர்வாக தரத்தைச் சேர்ந்த வைத்திய உத்தியோகத்தர் தரத்தைச் சேர்ந்தவர்களும், விசேட வைத்திய நிபுணர் தரத்தைச் சேர்ந்தவர்களும் அந்நியமனம் கிடைக்கப்பெற்ற திகதியிலிருந்து இரண்டு வருடங்களினுள் தேர்ச்சியடைய வேண்டிய திணைக்களப் பரீட்சை 2017.10.21 ஆந் திகதி சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் நடாத்தப்படும் என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது. பரீட்சை நடாத்தப்படும் இடமும் கால அட்டவணையும் பிரவேசப்பத்திரத்துடன் அனுப்பிவைக்கப்படும்.

2. **தகைமைகள்**.- உரிய பரீட்சையினைப் பூரணப் படுத்தியிராத ஆரம்ப தர வைத்திய உத்தியோகத்தர்களும், நியமனத்தில் உறுதிப்படுத்தப்படாத பல் சத்திர சிகிச்சை நிபுணர்களும் இந்தப் பரீட்சையின் பொருட்டு விண்ணப்பிக்க முடியும். மேலும் இத்திணைக்களப் பரீட்சையினைப் பூரணப்படுத்தியிராத நிர்வாகத் தரத்தைச் சேர்ந்த வைத்திய உத்தியோகத்தர் தரத்தைச் சேர்ந்தவர்களும், விசேட வைத்திய நிபுணர் தரத்தைச் சேர்ந்தவர்களும் இப்பரீட்சையின் பொருட்டு விண்ணப்பிக்க முடியும்.

3. **விண்ணப்பங்கள்**.- இச்சுற்று நிருபத்தில் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தைப் போன்று விண்ணப்பதாரிகளினால் தயாரித்துக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் 2017.09.22 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் நிறுவனத் தலைவரிடம் பாரமளிக்கப்பட வேண்டும். விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அனைத்துத் தகைமைகளையும் பூரணப்படுத்தியுள்ளதாக நிறுவனத் தலைவர் சான்றுப்படுத்திய பின் விண்ணப்பமானது "சுகாதார அமைச்சு, கொழும்பு 10, இலக்கம் 385, வண. பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, 'சுவசிரிபாய கட்டிடம்', பணிப்பாளர் (பரீட்சை)" அவர்களுக்கு 2017.09.30 ஆந் திகதி அல்லது அத்தினத்திற்கு முன்பு கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலின் மூலம் அனுப்ப வேண்டும். தனது விண்ணப்பத்துடன் முகவரி எழுதப்பட்ட 35 ரூபா பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட 9" × 4" அளவுள்ள கடித உறைகள் 2 அனுப்ப வேண்டும். (இதில் விரும்பிய வகையில் அலுவலக முகவரி அல்லது சொந்த முகவரியை எழுதலாம்).

**கவனிக்கவும்**.- மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய விண்ணப்பம் ஏ4 தாளின் இரண்டு பக்கங்களையும் உபயோகித்து தயாரிக்கப்பட வேண்டும். முதற்பக்கத்தில் இலக்கம் 1-4 (உ) தொடக்கமும் இரண்டாம் பக்கத்தில் 4(ஊ)-9 தொடக்கமும் அமையும் வண்ணம் விண்ணப்பம் தயாரிக்கப்படல் வேண்டும். மேற்படி தகவல்களுக்கு அமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும் என்பதை கவனத்தில் கொள்ளவும்.

4. **பரீட்சைக் கட்டணம்**.- (i) முதன் முறையாகப் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர்கள், பரீட்சைக் கட்டணத்தினின்றும் விதிவிலக்கப்படுவர். ஏனைய விண்ணப்ப தாரர்கள் ஒரு விடயத்திற்கு ரூபா 25 வீதம் மதிப்பிழக்கப்படாத முத்திரைகளை விண்ணப்பத்தில் ஒட்டி அதன் மேல் தனது கையொப்பத்தையும் திகதியையும் இட்டு அதை செல்லுபடி நீக்கம் செய்யப்படுதல் வேண்டும்.

(ii) எக்காரணத்தைக் கொண்டும் இவ்வாறு செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் வேறு பரீட்சையொன்றின் பொருட்டு மாற்றவோ அல்லது மீளச் செலுத்தப்படவோ மாட்டாது.

5. **பரீட்சைக்கு அனுமதித்தல்**.- (i) ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களுக்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படும். அவ் அனுமதிப்பத்திரங்களை உரிய முறையில் நிரப்பி பரீட்சை நிலைய அதிபருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டைகள் சமர்ப்பிக்கப்படாத எந்த ஒரு பரீட்சார்த்தியும் பரீட்சைக்கு அனுமதிக்கப்படமாட்டார்.

(ii) விண்ணப்பதாரர்களினால் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை நிலைய அதிபருக்குத் தனது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதன் பொருட்டு கீழே குறிப்பிடப்படும் ஆவணங்களில் ஒன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும் :-

(அ) தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ஆ) திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அடையாள அட்டை ;
(இ) வலுவுள்ள அனுமதிப்பத்திரம் ;
(ஈ) வலுவுள்ள கடவுச்சீட்டு.

(iii) தவிர்க்க முடியாத காரணத்தினால் பரீட்சை அனுமதிப்பத்திரம் கிடைக்கப்பெறாதவிடத்து சுகாதார அமைச்சின் இணையத்தளத்தில் தங்களினது பரீட்சைச் சுட்டெண், பரீட்சை நிலையம் என்பவற்றினை பெற்றுக்கொண்டு தங்களது கையொப்பத்தினை உறுதிப்படுத்திய திணைக்களத் தலைவரின் கடிதத்துடன் இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை நிலையத்தில், இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சுட்டெண்ணில் தாங்கள் பரீட்சையினை மேற்கொள்ள முடியும். அனுமதி அட்டை கிடைக்கப்பெற்றவர்கள் கட்டாயமாக கையொப்பத்தினை உறுதிப்படுத்திக்கொண்டு வருதல் வேண்டும். (கையொப்பத்தினை உறுதிப்படுத்திய கடிதம் அல்லது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையினை முன்னளிப்பு செய்யாதவர்கள் பரீட்சைக்கு தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள்). (சுகாதார அமைச்சின் இணையத்தள முகவரி : www.health.gov.lk).

6. **பரீட்சைத் திட்டம்**.- இப்பரீட்சை மூன்று எழுத்து மூல கட்டுரை வினாப் பத்திரங்களையும் சிங்களம்/ தமிழ் வாய்மொழிப் பரீட்சை ஆகிய 4 பிரிவுகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு பிரிவிற்கும் 100 புள்ளிகள் வீதம் ஒதுக்கப்பட்டுள்ளது. தேர்ச்சியடைவதன் பொருட்டு ஒரு விடயத்திற்கு குறைந்தபட்சம் 50 புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். ஒரு அமர்வில் அல்லது பல அமர்வுகளில் பிரிவுகளுக்குத் தோற்றி பரீட்சையைப் பூரணப்படுத்திக்கொள்ளலாம்.

7. **பரீட்சைப் பாடத்திட்டம்**.-

7.1 ***எழுத்துப் பரீட்சை***

7.1.1 *தாபனவிதிக்கோவை*
(நேரம் : 02 மணித்தியாலம்) 08 வினாக்களில் 05 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

பாடவிதானம்
(i) சுகாதார அமைச்சின் சுகாதாரத் திணைக்களத்தின் பொதுவான ஒழுங்கு விதிகள்.
(ii) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஒழுங்குவிதிகள்.
(iii) தாபனவிதிக்கோவை
(அ) I ஆம் பிரிவு VI, VII, VIII, IX, XII, XIII, XIV, XV, XVI, XVII, XVIII, XXIII, XXIV, XXV, XXVI, XXVII, XXVIII, XXX, XXXI, XXXII அத்தியாயங்கள்.
(ஆ) II ஆம் பிரிவு XLVII, XLVIII ஆகிய அத்தியாயங்கள்.

7.1.2 *வைத்தியசாலைகள், மருந்துச்சாலைகள் என்பனவற்றின் நிர்வாகம்*
(நேரம் : 1 1/ 2 மணித்தியாலம்) 07 வினாக்களில் 04 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

பாடவிதானம்
சுகாதாரக் கைநூல்
(i) வைத்தியசாலைகள், பொதுச் சுகாதார நிர்வாகம்
(ii) ஆய்வுகூட சேவை முகாமைத்துவம்
(iii) மருந்து முகாமைத்துவம்

7.1.3 *கணக்கியல் :*
(நேரம் : 02 மணித்தியாலம்) 07 வினாக்களில் 04 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்,

பாடவிதானம்
(i) சுகாதாரத் திணைக்களத்தில் களஞ்சியக் கணக்கு வைத்தல் தொடர்பான ஒழுங்குவிதிகள்
(ii) சுகாதாரத் திணைக்களத்தில் வழிகாட்டிக் கைநூலில் நிதி தொடர்பான பந்தி
(iii) சுகாதார வைத்திய உத்தியோகத்தர் ஒருவரின் நாளாந்த கடமைகளுக்கு ஏற்புடைய நிதிப்பிரமாணம்

I ஆம் அத்தியாயம் - நிதிப் பிரமாணம் 1, 2, 78
II ஆம் அத்தியாயம் - நிதிப் பிரமாணம் 90, 91, 101, 102, 103, 104, 105, 106, 107, 108, 109, 110, 113, 115, 118, 119
III ஆம் அத்தியாயம் - நிதிப் பிரமாணம் 124, 125, 126, 127, 128, 131, 133, 134, 135, 136, 137, 138, 139, 140, 142, 143, 151, 152, 154, 155, 156, 189
V ஆம் அத்தியாயம் - நிதிப் பிரமாணம் 200, 201, 215, 225, 238, 245, 255, 257, 260
VI ஆம் அத்தியாயம் - நிதிப் பிரமாணம் 380, 381, 382, 383, 384, 385, 386, 388, 389, 390, 391, 392, 393, 394
VII ஆம் அத்தியாயம் - நிதிப் பிரமாணம் 488, 493
XIII ஆம் அத்தியாயம் - நிதிப் பிரமாணம் 715, 716, 756, 757, 758

பெறுகை வழிகாட்டிக் கோவை :
1 ஆம் அத்தியாயம் - அனைத்துப் பிரிவுகளும்
2 ஆம் அத்தியாயம் - 2.3, 2.4, 2.5, 2.6, 2.7, 2.8
3 ஆம் அத்தியாயம் - 3.1, 3.2, 3.3, 3.4, 3.5, 3.6, 3.7, 3.8, 3.9

7.2 ***சிங்களம்/ தமிழ் வாய்மொழிப் பரீட்சை***.- சிங்களம்/ தமிழ் ஆற்றலை அளப்பதன் பொருட்டு திணைக்களத்தின் பதவிநிலை உத்தி யோகத்தர்களினால் நடாத்தப்படும் வாய்மொழிப் பரீட்சையாகும். தனது நாளாந்த கடமைகளில் ஈடுபடும் பொழுது மேலோங்கும் நிகழ்வுகள் தொடர்பாக சிங்கள மொழி மூல உத்தியோகத்தர்களுக்கு தமிழ் மொழியிலும், தமிழ் மொழி மூல உத்தி யோகத்தர்களுக்கு சிங்கள மொழியிலும் கலந்துரையாடுவதற்கு உத்தியோகத்தருக்கு உள்ள ஆற்றலைப் பரீட்சித்தல். (நேரம் : 10 நிமிடம்)

8. **பரீட்சை தொடர்பான ஒழுங்குவிதிகளைக் கடைப்பிடித்தல்**.- பரீட்சார்த்திகள் குறிப்புக்களை தன்னிடத்தில் வைத்து பார்த்து எழுதுதல் தடைசெய்யப்பட்டுள்ளது. ஏனைய பரீட்சார்த்திகளின் விடைத்தாளினைப் பார்த்து எழுதுதலும் தடை செய்யப்பட்டுள்ளது. ஒருவருக்கொருவர் உதவி செய்தலைத் தவிர்த்துக்கொள்ளல் வேண்டும். மேலும் கையடக்கத் தொலைபேசி மற்றும் அதனுடன் தொடர்புடைய தொடர்பாடல், இலத்திரனியல் உபகரணங்களைப் பயன்படுத்தாதிருத்தல் வேண்டும். இவ்விதிகளை மீறும் எந்தவொரு பரீட்சார்த்தி மீதும் நடவடிக்கை எடுக்கப்படும்.

9. தயவுசெய்து இச்சுற்றுநிருபத்தை உங்கள் நிறுவ னத்தில் கடமையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு அறிவிப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளவும். இத்தகவல் கள் www.health.gov.lk எனும் இணையத்தளத்தில் பெற்றுக் கொள்ளமுடியும்.

**குறிப்பு**.- இவ்வறிவித்தலில் தமிழ், ஆங்கில மொழிபெயர்ப் புக்களில் ஏதாவது ஒவ்வாமை காணப்படின் சிங்கள மொழி மூல அறிவித்தலே வலுவுடையதாகும்.

எம். பி. எல். ரகுமான்,
பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம்) II,
சுகாதாரம், போஷணை மற்றும்
சுதேச வைத்திய அமைச்சின் செயலாளருக்காக.

சுகாதாரம், போஷணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு,
"சுவசிரிபாய",
இல. 385, வண. பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை,
கொழும்பு 10,
2017.08.28.

மாதிரி விண்ணப்பப்படிவம்

| |
|---|
| |

(அலுவலக பிரயோகத்தின் பொருட்டு)

**ஆரம்ப தர வைத்திய உத்தியோகத்தர்களுக்கும் பல் சத்திரசிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்களுக்குமான திணைக்களப் பரீட்சை – 2017, செத்தெம்பர்**

1\. (அ) (i) விண்ணப்பதாரரின் முழுப்பெயர் (தமிழில்) :-----.


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழை திருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2017, ஒற்றோபர் மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2017, செத்தெம்பர் மாதம் 29 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

(ii) விண்ணப்பதாரரின் முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :-

| | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | |

(iii) முதல் எழுத்துக்களுடன் பெயர் (தமிழில்) : -----.

(iv) முதல் எழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :-

| | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | |

(ஆ) (i) பதவி (உரிய கூட்டினுள் (✓) அடையாளமிடுக).

(I) வைத்திய உத்தியோகத்தர் : ☐

(II) பல் சத்திர சிகிச்சை வைத்திய உத்தியோகத்தர் : ☐

(ii) தகுதிகூர் நிலைக்கால நியமனம் பெற்ற திகதி :-----.

(iii) ஆரம்ப தரத்திற்கு/ தரம் II இற்கு நியமிக்கப்பட்ட திகதி :-----.

2. நீங்கள் இம்முறை தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் விடயங்களுக்கு முன்னால் உள்ள கூட்டினுள் (✓) அடையாளத்தை இடவும். தோற்றாவிடின் (x) குறியை இடவும்.

வைத்தியசாலைகள் மருந்துச்சாலைகள் என்பனவற்றின் நிர்வாகம் ☐ தாபன விதிக் கோவை ☐

கணக்கியல் ☐

சிங்களம் வாய்மொழி ☐ தமிழ் வாய்மொழி ☐

3. பரீட்சைக்குத் தோற்றும் மொழி :

சிங்களம் ☐ தமிழ் ☐ ஆங்கிலம் ☐

(உரிய கூட்டினுள் ( ✓ ) அடையாளத்தை இடவும்)

4. (அ) (i) தற்பொழுது சேவையாற்றும் சேவை நிலையம் :-----.

(ii) சேவை நிலையம் நிர்வகிக்கப்படுவது :

மத்திய அரசின்கீழ் ☐

மாகாண அரசின்கீழ் ☐

(ஆ) (i)மாகாண சபையாயின் உரிய மாகாணம் :-----.

(ii) அதற்குரிய மாவட்டம் :

(இ) கையடக்கத் தொலைபேசி இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

(ஈ) தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

(உ) கீழ்வரும் பரீட்சை நிலையங்களுள் விரும்பிய பரீட்சை நிலையம்.- (தெரிவுசெய்யும் பரீட்சை நிலையத்திற்கு போதிய விண்ணப்பதாரிகள் இல்லாதவிடத்து அண்மையிலுள்ள பரீட்சை நிலையத்திற்கு அல்லது சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும் பரீட்சை நிலையத்திற்கு அழைக்கப்படுவர்) பொருத்தமான கூட்டினுள் சரி (✓) அடையாளமிடுக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கொழும்பு | | கந்தானை | | அம்பாந்தோட்டை | |
| அம்பாறை | | களுத்துறை | | காலி | |
| பதுளை | | வவுனியா | | குருநாகல் | |
| அனுராதபுரம் | | இரத்தினபுரி | | பொலன்னறுவை | |
| கண்டி | | மட்டக்களப்பு | | யாழ்ப்பாணம் | |
| திருகோணமலை | | | | | |

(ஊ) அனுமதிப்பத்திரம் அனுப்புவதன் பொருட்டு பிழையற்ற தெளிவாக முகவரி எழுதப்பட்ட 9" × 4" அளவுள்ள ரூபா 35.00 பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்ட கடித உறைகள் இரண்டு விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

(எ) (i) அஞ்சல் முகவரி (சிங்களத்தில் அல்லது தமிழில்) :-----.

(ii) அஞ்சல் முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :-----.

5. (அ) இதற்கு முன் இப்பரீட்சைக்குத் தோற்றி உள்ளீர்களா? :-----.

(ஆ) இப்பரீட்சைக்குத் தோற்றுவது முதன் முறை அல்லா விடின் முத்திரைகள் ஒட்டப்பட்டுள்ளனவா? :-----.

| முத்திரைக் கூடு<br>(முத்திரையை ஒட்டி அதன் மீது கையொப்பமிடுக.) |
|---|

6. விண்ணப்பதாரரின் உறுதியுரை :

எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டியவகையில்-

(i) இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவைகளெனவும், நான் இப்பரீட்சைக்குத் தோற்றுவது முதன்முறையாக என்றபடியினால் கட்டணம் செலுத்தத் தேவை யில்லை எனவும்/ முதன் முறை அல்லாதபடியால் ரூபா .......... பெறுமதியான முத்திரைகள் ஒட்டி யுள்ளேன் எனவும், இவ்விண்ணப்பத்திற்கு என்னால் ஒட்டப்பட்டுள்ள முத்திரைகள் செல்லுபடி நீக்கம் செய்யப்படுவதற்கு முன்பு பாவிக்கப்படாத முத்திரைகள் எனவும் உறுதியளிக்கின்றேன்.

(ii) சுகாதாரம், போஷணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சினால் பரீட்சை தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள சட்டதிட்டங்களுக்கு அமைந்து நடப்பதற்கும், இப்பரீட்சை தொடர்பான நியதிச் சட்டத்தின்படி நான் தகைமையற்றவன் எனக் காணப்படின் எனது பரீட்சார்த்தித் தன்மையை இரத்துச் செய்வதற்கு மேற்கொள்ளப்படும் எவ்விதத் தீர்மானத்திற்கும் நான் கீழ்ப்படிவேன் எனவும் இத்தால் உறுதிமொழிகின்றேன்.

------,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

7. சுயவிபரக் கோவையினைக் கையாளும் விடய உத்தியோகத்தரின் சான்றிதழ் :

இவ்விண்ணப்பமானது விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர் என்னிடம் பாரமளிக்கப்பட்டது என்றும், சுயவிபரக் கோவையில் உள்ள தகவல்களின் அடிப்படையில் சரியாகப் பூரணப்படுத்தப்பட்டுள்ளது என்றும், இத்திணைக்களப் பரீட்சைக்கு தோற்றுவதற்குத் தேவையான தகைமைகள் பூரணப்படுத்தப்பட்டுள்ளது என்றும் இவ்விண்ணப்பப்பத்திரத்தின் பிரதி ஒன்று சுயவிபரக் கோவையில் கோவையிடப்பட்டுள்ளது என்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
பெயரும் கையொப்பமும்.

திகதி :----.

8. நிறுவனத் தலைவரின் சான்றிதழ் :

திரு./ திருமதி/ செல்வி ................................ என்பவர் எனது நிறுவனத்தில் சேவை புரியும் வைத்திய உத்தியோகத்தர்/ பல் வைத்தியர் என்றும் இப்பரீட்சைக்குத் தோற்றுவது முதன் முறை/ அல்லாதபடியால் ரூபா ............ பெறுமதியான முத்திரைகள் இவ்விண்ணப்பத்தில் ஒட்டியுள்ளதாகவும்/ முத்திரை ஒட்டவேண்டியதில்லை எனவும் விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் விண்ணப்பதாரரின் பெயர்வழிக்கோவையிலுள்ள விபரங்களின்படி பிழையற்றவைகளெனவும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவருக்குத் தகைமைகள் உண்டு எனவும் எனது முன்னிலையில் கையொப்பம் இட்டார் எனவும் சான்றுப்படுத்துகின்றேன்.

------,
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

திகதி :-----.

9. விசேட இயக்கத் தலைவரின் சான்றிதழ் :

*திரு./ திருமதி/ செல்வி ................................. என்பவர் ஆரம்ப தர வைத்திய உத்தியோகத்தர் ஒருவர்/ பல் சத்திர சிகிச்சை வைத்தியர் *ஒருவராக எனது பிரிவில்/ விசேட இயக்கத்தில்* சேவையாற்றுகின்றார் எனவும் விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் விண்ணப்பதாரரின் பெயர் வழிக்கோவையிலுள்ள விபரங்களின்படி பிழையற்றவைகளெனவும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவருக்கு தகைமைகள் உண்டு எனவும் இத்தால் சான்றுப்படுத்துகின்றேன்.

-----,
பன்முகப்படுத்தப்பட்ட பிரிவு/விசேட இயக்கத் தலைவரின் கையொப்பம்
(முத்திரை இடப்படுதல் வேண்டும்).

திகதி :-----.

(*தேவையற்றவற்றைக் கீறிவிடவும்.)

9-491

# பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

## கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

**இலங்கைப் புகையிரத சேவைகள்**

பெறுகை அறிவித்தல்

PROCUREMENT FOR THE SUPPLY, INSTALLATION & COMMISSIONING OF 01 No. NEW ULTRA PRECISION GAP BED LATHE MACHINE
PROCUREMENT No. SRS/F. 7495

1. கொழும்பு 10, இலங்கை புகையிரத சேவைகள் திணைக்களப் பெறுகைக் குழுவின் (உயர் மட்டம்) தலைவர் இரத்மலானை புகையிரத வேலைத்தளத்தில் 01 No. NEW ULTRA PRECISION GAP BED LATHE MACHINE இன் வழங்கல், நிறுவுதல் மற்றும் செயற்படவைத்தல் ஆகியவற்றிற்காக உற்பத்தியாளர்கள்/ வழங்குநர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக் களை பெற்றுக்கொள்வார். உற்பத்தியாளர்கள் அவர்தம் விலைமனுக்களை அற்றோணித்தத்துவம் வழங்கப்பட்ட தர அங்கீகாரம் பெற்ற முகவர் ஊடாகவும் சமர்ப்பிக்கலாம்.

2. விலைமனுக்கள் 2017. 10. 17 ஆந் திகதி பி.ப. 2.00 மணிக்கு (இலங்கை நேரம்) மூடப்படும்.

3. 2017.10.16 ஆந் திகதி இலங்கை நேரம் பி.ப. 3.00 மணி வரையும் மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக 2,600 ரூபாவை மாத்திரம் அல்லது இலகுவில் மாற்றக்கூடிய நிகரான பணத்தைச் செலுத்திய பின்னர் இலங்கை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகர் அலுவலகத்தில் இருந்து அல்லது வெளிநாட்டு தூதுவராலயங்களிலிருந்து பெறக்கூடிய படிவங்கள் மற்றும் விலைமனுக்கோரல் ஆவணத்துடன் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

4. விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர், இலங்கை, கொழும்பு 10, புகையிரத களஞ்சியசாலைகள் திணைக்களம் , புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்தில் திறக்கப்படும். விலைமனுக்களைத் திறக்கும் வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்தம் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

5. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் ஒன்றில் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். அல்லது நேரடியாகவே பின்வரும் முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

தலைவர்,
திணைக்கள பெறுகைக்குழு ( உயர் மட்டம்),
இலங்கைப் புகையிரத சேவைகள்,
புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகம்,
ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10.

6. விலைமனுக்கோரல் ஆவணங்களை இலங்கை, கொழும்பு 10, புகையிரத களஞ்சியசாலைகள் திணைக்களம், புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்தில் இலவசமாகப் பரீட்சிக்கப்படலாமென்பதுடன் மேலதிக விபரங்களுக்குத் தயவு செய்து பின்வரும் முறைமைகளூடாக தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி இலக்கங்கள்: 94(11) 2438078 அல்லது 94(11) 2436818
தொலைநகல் இலக்கம்: 94(11) 2432044
மின்னஞ்சல்: srs.slr @ gmail.com
இணையத்தளம் : www.railway.gov.lk

தலைவர்,
திணைக்கள பெறுகைக் குழு ( உயர் மட்டம்),
இலங்கைப் புகையிரத சேவைகள் .

குறிப்பீட்டு இல. SRS/F.7495.

9- 487

---

**இலங்கைப் புகையிரத சேவைகள்**

பெறுகை அறிவித்தல்

தெமட்டகொடை பாலங்கள் பொறியிலாளர் பிரிவிலுள்ள 04 எண்ணிக்கையான கொள்கலன்களின் விற்பனை - SRS/F. 7295

1. தெமட்டகொடை பாலங்கள் பொறியியலாளர் பிரிவிலுள்ள 04 எண்ணிக்கையான கொள்கலன்கள் விற்பனைக்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கைப் புகையிரத சேவைகள் திணைக்களப் பெறுகைக்குழுத் ( உயர்மட்டம்) தலைவர் பெற்றுக்கொள்வார்.

| விளக்கம் | அமைவிடம் | அளவு (நீளம் X அகலம் X உயரம்) |
|---|---|---|
| 02 எண்ணிக் கையான கொள்கலன்கள் | பாலங்களுக்கான தளம் தெமட்டகொடை | 45'x8' 6"x 9'6" |
| 02 எண்ணிக் கையான கொள்கலன்கள் | பாலங்களுக்கான தளம் தெமட்டகொடை | 40'x8' 6"x 9'6" |

2. விலைமனுக்கள் 2017. 09. 22 ஆந் திகதி பி.ப. 2.00 மணிக்கு மூடப்படும்.

3. 2017.09.21 ஆந் திகதி பி.ப. 3.00 மணி வரையும் மீளளிக்கப்படாத ஆவணக்கட்டணமாக 10,000 ரூபாவை மாத்திரம் செலுத்திய பின்னர் கொழும்பு 10, புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்திலிருந்து பெறக்கூடிய படிவங்களிலேயே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

4. விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர், உடனடியாக களஞ்சியசாலைகளுக்கான அத்தியட்சகரின் அலுவலகத்தில் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்தம் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்களைத் திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

5. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் ஒன்றில் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது நேரடியாகவே பின்வரும் முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

தலைவர்,
திணைக்களப் பெறுகைக்குழு ( உயர் மட்டம்),
இலங்கைப் புகையிரத சேவைகள்,
புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகம்,
ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10.

6. விலைமனுக்கோரல் ஆவணங்கள் புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்தில் இலவசமாகப் பரீட்சிக்கப்படலாம்.

7. மேலதிக விபரங்களுக்குப் பின்வரும் முறைமைகளூடாக தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி இலக்கங்கள்: 94(11) 2438078 அல்லது 94(11) 2436818
தொலைநகல் இலக்கம்: 94(11) 2432044
மின்னஞ்சல்: srs.slr @ gmail.com

தலைவர்,
திணைக்களப் பெறுகைக் குழு ( உயர் மட்டம்),
இலங்கைப் புகையிரத சேவைகள் .

குறிப்பீட்டு இல. SRS/F.7295.

9- 488

---

**இலங்கைப் புகையிரத சேவைகள்**

பெறுகை அறிவித்தல்

PROCUREMENT OF 56, 000 Nos. Bolts & Nuts and 100,000 Nos. Spring Washers to Sri Lanka Railways

PROCUREMENT No. SRS/F. 7532

1. இலங்கைப் புகையிரத சேவைகள் திணைக்கள பெறுகைக் குழு (உயர்மட்டம்) தலைவர் உற்பத்தியாளர்கள்/வழங்குநர்களிடமிருந்து 56, 000 Nos. and Bolts & Nuts 100, 000 Nos. Spring Washers ஆகியவற்றின் பெறுகைக்கான

முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பெற்றுக் கொள்வார். விலைமனுதாரர்கள் அவர்தம் விலைமனுக்களை நேரடியாகவோ அல்லது அற்றோனித்தத்துவம் வழங்கப்பட்ட தர அங்கீகாரம் பெற்ற இலங்கையில் பதிவு பெற்ற முகவர் ஊடாகவும் சமர்ப்பிக்கப்பலாம்.

2. 2017.10.19 ஆந் திகதி இலங்கை நேரம் பி.ப.3.00 மணி வரையும் மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக 4,000 ரூபாவை அல்லது இலகுவில் மாற்றக்கூடிய நிகரான பணத்தை செலுத்திய பின்னர் புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத் திலிருந்து அல்லது வெளிநாட்டுத் தூதுவராலயங்களிலிருந்து பெறக்கூடிய படிவங்களிலேயே சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

3. விலைமனுக்கள் 2017.10.20 ஆந் திகதி பி.ப. 2.00 மணிக்கு (இலங்கை நேரம்) மூடப்படும்.

4. Bolts & Nuts and Spring Washers ஆகியவற்றின் உற்பத்தி/வழங்கல் ஆகியன கொள்வனவுகாரர் ஏற்றுக் கொள்ளப்படத்தக்க வகையில் ISO 9001: 2008 என்பதற்கு அல்லது நிகரான சர்வதேச தர முகாமைத்துவ முறைமை நியமமாக்கப்பட்ட வகையிலான நிறுவனங்களினால் பொறுப்பேற்கப்படல் வேண்டும்.

5. விலைமனுக்கள் அவைகளை முடிய பின்னர், புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்தில் திறக்கப்படும் விலைமனுக்களைத் திறக்கும் வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்தம் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

6. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் ஒன்றில் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது நேரடியாகவே பின்வரும் முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

தலைவர்,
திணைக்கள பெறுகைக்குழு ( உயர் மட்டம்),
இலங்கை புகையிரத சேவைகள்,
இலங்கை களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகம்,
ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10.

7. விலைமனுக்கோரல் ஆவணங்கள் புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்தில் இலவசமாகப் பரீட்சிக்கப்படலாம்.

தொலைபேசி இலக்கங்கள்: 94(11) 2438078 அல்லது 94(11) 2436818
தொலைநகல் இலக்கம்: 94(11) 2432044
மின்னஞ்சல்: srs.slr @ gmail.com
இணையத்தளம் : www.railway.gov.lk

தலைவர்,
திணைக்களப் பெறுகைக் குழு ( உயர் மட்டம்),
இலங்கைப் புகையிரத சேவைகள் .

குறிப்பீட்டு இல. SRS/F.7532.

9- 489

---

**இலங்கைப் புகையிரத சேவைகள்**

பெறுகை அறிவித்தல்

PROCUREMENT FOR THE PURCHASE OF CURVED SWITCHES ( Rail Section) EN 45 E1 1676 mm Gauge - SRS/ F. 7507

1. இலங்கை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, இலங்கைப் புகையிரத சேவைகள் திணைக்களப்பெறுகைக்குழுவின் (உயர்மட்டம்)தலைவர் வெளிநாட்டு உற்பத்தியாளர்கள்/ வழங்குநர் களிடமிருந்து CURVED SWITCHES (Rail Section) EN 45 E1 1676 mm Gauge) இன் வடிவமைத்துக்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பெற்றுக்கொள்வார். உற்பத்தி யாளர்கள்/ வழங்குநர்கள் அவர்தம் விலைமனுக்களை அற்றோனித்தத்துவம் வழங்கப்பட்ட தர அங்கீகாரம் பெற்ற முகவர் ஊடாகவும் சமர்ப்பிக்கலாம்.

2. விலைமனுக்கள் 2017. 10. 13 ஆந் திகதி பி.ப. 2.00 மணிக்கு (இலங்கை நேரம்) மூடப்படும்.

3. 2017.10.12 ஆந் திகதி இலங்கை நேரம் பி.ப. 3.00 மணி வரையும் மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக 4,000 ரூபாவை மாத்திரம் அல்லது இலகுவில் மாற்றக்கூடிய நிகரான பணத்தை செலுத்திய பின்னர் இலங்கை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத களஞ்சியங்கள் அத்தியட்சகர் அலுவலகத்தில் இருந்து அல்லது வெளிநாட்டு தூதுவராலயங்களிலிருந்து பெறக்கூடிய படிவங்கள் மற்றும் விலைமனுக்கோரல் ஆவணத்துடன் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

4. விலைமனுக்கள் அவைகளை முடிய பின்னர், இலங்கை, கொழும்பு 10, புகையிரத களஞ்சியசாலைகள் திணைக்களம் , புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்தில் திறக்கப்படும். விலைமனுக்களைத் திறக்கும் வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்தம் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

5. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் ஒன்றில் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். அல்லது நேரடியாகவே பின்வரும் முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

தலைவர்,
திணைக்கள பெறுகைக்குழு ( உயர் மட்டம்),
இலங்கை புகையிரத சேவைகள்,
இலங்கை களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகம்,
த.பெட்டி இல. 1347, ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கை.

6. விலைமனுக்கோரல் ஆவணங்களை புகையிரத களஞ்சிய சாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்தில் இலவசமாகப் பரீட்சிக்கப்படலாம்.

7. மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து பின்வரும் முறைமைகளூடாக தொடர்பு கொள்ளவும்.
தொலைபேசி இலக்கங்கள்: 94(11) 2438078 அல்லது 94(11) 2436818
தொலைநகல் இலக்கம்: 94(11) 2432044
மின்னஞ்சல்: srs.slr @ gmail.com

தலைவர்,
திணைக்களப் பெறுகைக் குழு ( உயர் மட்டம்),
இலங்கைப் புகையிரத சேவைகள் .

குறிப்பீட்டு இல. SRS/F.7507.

9- 490

---

பெறுகை அறிவித்தலுக்கான திருத்தம்

**இலங்கைப் புகையிரத சேவைகள்**

PROCUREMENT OF SUPPLY, INSTALLATION, TESTING, COMMISSIONING AND MAINTENANCE OF 200 Nos. OF BELL & LIGHT LEVEL CROSSING PROTECTION SYSTEMS TO SRI LANKA RAILWAYS

PROCUREMENT No. SRS/F. 7410/1

1. 2017.08.18 ஆந் திகதிய வர்த்தமானி இல. 2033, அறிவித்தல் இல. 8-544 இல் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் தொடர்பானது -

2. இலங்கை பத்தரமுல்லை, II ஆம் படிமுறை, "செத்சிறிபாய", 7 ஆம் மாடி, போக்குவரத்து மற்றும் சிவில் விமானசேவைகள் அமைச்சு, அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையியல் பெறுகைக் குழுத் தலைவர் பின்வருமாறு இறுதியான வழங்கும் திகதி மற்றும் விலைமனுவின் மூடும்/ திறத்தல் ஆகியவற்றை நீடித்துள்ளார்

* ஆவணங்களின் வழங்கலுக்கான இறுதித் திகதி : 2017.09.27.
* விலைமனுக்களின் மூடும்/திறத்தல் திகதி : 2017.09.28.

3. மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து பின்வருபவருடன் தொடர்பு கொள்ளவும்.-
புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகர்,
புகையிரத களஞ்சியசாலைத் திணைக்களம்,
த.பெட்டி இல. 1347, ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10.

தொலைபேசி இலக்கங்கள்: 94(11) 2438078 அல்லது 94(11) 2436818
தொலைநகல் இலக்கம்: 94(11) 2432044
மின்னஞ்சல்: srs.slr @ gmail.com

தலைவர்,
அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட
நிலையியல் பெறுகைக் குழு, போக்குவரத்து
மற்றும் சிவில் விமானசேவைகள் அமைச்சு

குறிப்பீட்டு இல. SRS/F.7410.

9- 587

---

# ஆய விற்பனையும் குத்தகை விற்பனையும்

**திருகோணமலை மாவட்டத்தில் 2017,ஒற்றோபர் 15 ஆந் திகதி தொடக்கம் 2018 யூன் மாதம் 30 ஆந் திகதி வரை கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை**

2017,ஒற்றோபர் மாதம் 15 ஆந் திகதியிலிருந்து 2018, யூன் மாதம் 30 ஆந் திகதி வரை கள்ளு சில்லறையாக விற்பதற்கான 1982. 08. 20 ஆம் திகதி கொண்ட 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கள்ளுத் தவறணை குத்தகையினை விற்பனை செய்வதற்கான நடைமுறைகளுக்கேற்ப, கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத்தவறணைக்கான விலைமனுக்கோரல்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. அனைத்து விலைக்கோரல்களும், திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர்/ மாவட்ட செயலாளர் பணிமனையிலிருந்து பெற்றுக்கொள்ளப்படும் விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்வதுடன் , கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விக் கோரல் வைப்புப் பணத்தினை வைப்புச் செய்தமையை உறுதிப்படுத்தும் முகமாக பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டினையும், குறிப்பிட்ட விலைமனுக்கோரல்கள் குறிப்பிடப்பட்டுள்ள விலை நிர்ணயத்திற்கு ஆகக் குறைந்தளவான 15% பெறுமதியான பெறுமதிச் சான்றிதழும் அதனோடு இணைத்தல் வேண்டும்.

3. உரியவாறு தயாரிக்கப்பட்ட அனைத்து விலைகோரல் பத்திரங்களும் அரக்கு முத்திரையிடப்பட்ட கடிதவுறையில் இடப்படல் வேண்டும். அக் கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் "............................... இலக்கமுடைய ......................கள்ளுத்தவறணைக்கான விலைமனுக்கோரல்கள்" எனக் குறிப்பிடப்படுவதுடன் , அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தவறணையின் பெயர், இலக்கம் ஆகியவற்றையும் குறிப்பிட்டு 2017.10. 09 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் /மாவட்ட செயலாளரிற்கு கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். அல்லது அந் நேரத்திற்கு முன் அரசாங்க அதிபர்/ மாவட்ட செயலாளர் பணிமனையில் வைக்கப்பட்டிருக்கும் விலைமனுக்கோரல்கள் பெட்டியில் இடுதல் வேண்டும்.

4. விலைமனுக்கோரலானது 1982.08.20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் வெளியாகியுள்ள கள்ளுத் தவறணைக் குத்தகைக்கான விற்பனை நியமங்களுக்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்.

5. 2017. 10.09 ஆந் திகதி விலைமனுக்கோரல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் நேரம் முடிவடைந்தவுடனேயே விலைமனுக்கோரல் பத்திரங்கள் திறக்கப்படும். அச் சந்தர்ப்பத்தில் அனைத்து கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் தரகர்கள் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் /மாவட்ட செயலாளர் பணிமனைக்கு சமுகமளித்திருத்தல் வேண்டும்.

6. முன்வைக்கப்பட்ட விலைமனுக்கோரல்களுக்குள் தெரிவு செய்யப்பட்ட திருப்திகரமான ஒப்பந்தக்காரரால் 03 மாதங்களுக்கான வைப்புப் பணமும் ஒரு மாதத்திற்கான அனுமதிப்பத்திர கட்டணமும் கேள்விப்பத்திரம் திறக்கப்படும் குறித்த தினத்திலேயே செலுத்தப்படல் வேண்டும்.

7. அட்டவணையில் காட்டப்பட்டுள்ள கள்ளுத்தவறணைகளுள் ஒன்றோ அதற்கு மேற்பட்டவற்றையோ 2017.10.09 ஆந் திகதி விற்பனை செய்ய முடியாதிருப்பின் மீண்டும் விற்பனை செய்வதற்காக 2017.10.16 ஆந் திகதி மு.ப.10.00 மணி வரை கேள்விப்பத்திரங்கள் பாரமேற்று முடிந்தவுடனேயே கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். இதற்காக மேலே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளும் உரித்தாகும் என்பதையும் கவனத்தில் கொள்ளவும்.

8. இது தொடர்பான மேலதிக விபரங்களை திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர்/மாவட்ட செயலாளர் பணிமனையில் பெற்றுக்கொள்ள முடியும்.

என். ஏ.ஏ. புஸ்பகுமார,
அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளரும்,
திருகோணமலை மாவட்டம்.

மாவட்டச் செயலகம்,
திருகோணமலை,
2017, செத்தெம்பர் 13.

**அட்டவணை**

| தொடர் இல. | பிரிவு | வலயப் பிரிவு | கள்ளுத் தவறணை திறக்கும் நேரம் | கள்ளுத் தவறணை மூடும் நேரம் | மீளளிக்கப்படும் விலைமனுக் கோரல்கள் வைப்புப் பணம் | மீளளிப்புச் செய்யப் படாத விலைமனுக் கோரல் வைப்புப் பணம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | வட்டார இல.1 | வில்லூன்றி இல.-01 | மு.ப.11.00<br>பி.ப. 5.00 | பி.ப.2.00<br>பி.ப.8.00 | ரூ. 3000 | ரூ. 1000 |
| 2. | கட்டுக்குளம் பற்று | நிலாவெளி இல.-04 | மு.ப.11.00<br>பி.ப. 5.00 | பி.ப.2.00<br>பி.ப.8.00 | ரூ. 1500 | ரூ. 1000 |

9- 793

---

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

**நோவோ நோர்டிஸ்க் லங்கா ( பிறைவேட் ) லிமிட்டட்**

ஒருங்கிணைப்புக்கான பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் நோவோ நோர்டிஸ்க் லங்கா ( பிறைவேட் ) லிமிட்டட் ஆனது 2017 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 28 ஆந் திகதி கம்பனி பதிவுஇலக்கம் பீவீ 124772 இன் கீழ் பதிவாகியுள்ளது என இத்தால் அறிவிக்கின்றோம். மேலும் இல. 116/10, ரொஸ்மிட் பிளேஸ், கொழும்பு 7 இல் இதன் பதிவு அலுவலகம் அமைந்துள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

சென்ட்ரல் கோப்பரேட் அன்ட்
கன்சல்டன்சி சேர்விசஸ் ( பிறைவேட் ) லிமிட்டட்,
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 116/10
ரொஸ்மிட் பிளேஸ்,
கொழும்பு 7.

9- 454

---

**பெயர் மாற்றம் பற்றிய பகிரங்க அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் பிரகாரம் கீழ்க்காணும் பெயர் மாற்றப்படுவதாக இத்தால் அறிவிக்கப்படு கின்றது-

கம்பனியின் பழைய பெயர்: றிஜன்சி ட்ரவல்ஸ் ( பிறைவேட் ) லிமிட்டட்
கம்பனியின் பதிவு இலக்கம் : பீவீ 4656
பதிவு செய்யப்பட்ட முகவரி : இல. 146, டோசன் வீதி கொழும்பு 02
கம்பனியின் புதிய பெயர்: பொக்ஸ் வெகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
பெயர் மாற்றப்பட்ட திகதி: 2017.08.29

பணிப்பாளர்/கம்பனிச் செயலாளர்.

9- 455

---

**பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் பிரகாரம் அறிவித்தல்.-

கம்பனியின் பெயர்: செவென் பிரதர்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவு இல. : பீவீ 123991
பதிவு முகவரி : இல. 49, ஜயந்தி மாவத்தை, திம்பிரிகடவள, அநுராதபுரம்
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2017.07.18

கம்பனிச் செயலாளர்.

9-456

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் பிரகாரம் கீழ் குறிப்பிடப்படும் கம்பனி 2007, ஒகத்து மாதம் 22 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டுள்ளது:-

கம்பனியின் பெயர் : ரெனைசான்ஸ் ஏசியா ( பிறைவேட் ) லிமிட்டட்
பதிவிலக்கம் : பி வி 124922
பதிவு முகவரி : இல. 32, வட மாவத்தை, நாவின்ன, மஹரகம

என். டி. ஹேப்புஹாரச்சி,
கம்பனிச் செயலாளர்.

9- 472

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்படி.-
கம்பனியின் பெயர் : எசியும் லங்கா (பிறைவேட்) லிமிட்டட்
பதிவு இலக்கம் : பீஎச் 124708
பதிவு செய்த திகதி : 2017 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 23 ஆந் திகதி
பதிவு செய்த அலுவலகம் : 97 A, காலி வீதி, கொழும்பு 3

பணிப்பாளர்.

9-502

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்.-

(1) கம்பனியின் பெயர் : எலிசிர் பெரேஸ்ட் ஜுஸஸ் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனி இல. : பீவீ 123740
பதிவு அலுவலகம் : இல.79, எலெக்ஸ்சென்ரா பிலேஸ், கொழும்பு 7
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2017, யூலை மாதம் 12
(2) கம்பனியின் பெயர் : எஸ். அன்ட் ஈ ஒகனிக்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனி இல. : பீவீ 124405
பதிவு அலுவலகம் : இல.79, எலெக்ஸ்சென்ரா பிலேஸ், கொழும்பு 7
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2017, யூலை மாதம் 08

(3) கம்பனியின் பெயர் : டிரேபெயா (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனி இல. : பீவீ 124983
பதிவு அலுவலகம் : இல.9/1, பள்ளி வீதி, தெஹிவளை
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2017, ஓகத்து மாதம் 24

என் கோபோரேட் (பிறைவேட்) லிமிட்டட்,
கம்பனிச் செயலாளர்கள்.

9- 503

---

## றைஸ்ரார் அப்பரல் எக்ஸ்போட்ஸ் ( பிறைவேட்) லிமிட்டட் கம்பனியின் பதிவு இல. பீவீ 8731

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 346(1) பிரிவின் கீழான கலைப்பாளர் நியமனம் பற்றிய அறிவித்தல்

கம்பனியின் பெயர் : றைஸ்ரார் அப்பரல் எக்ஸ்போட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி : இல. 30, மாளிகாவ வீதி, இரத்மலானை
நீதிமன்றம் : வர்த்தக உயர் நீதிமன்றம், மேல்மாகாணம், கொழும்பு (குடியியல்)
வழக்கு இல. : HC ( CIVIL) 52/ 2016/ CO
கம்பனியின் கலைப்பாளர் பெயர் : G.J. DAVID
முகவரி : C/O SJMS Associates
Restructure & Corporate Recovery,
Leve;3, No. 11, Castle Lane,
Colombo 04
நிமனத் திகதி : 2017.08.11

9-504/1

---

## றைஸ்ரார் அப்பரல் எக்ஸ்போட்ஸ் ( பிறைவேட்) லிமிட்டட் கம்பனியின் பதிவு இல. பீவீ 8731

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 270(ஈ) மற்றும் (எப்) அப்பிரிவுகளின் கீழான கம்பனி கலைப்பு உத்தரவு பற்றிய அறிவித்தல்

கம்பனியின் பெயர் : றைஸ்ரார் அப்பரல் எக்ஸ்போட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி : இல. 30, மாளிகாவ வீதி, இரத்மலானை
நீதிமன்றம் : வர்த்தக உயர் நீதிமன்றம், மேல்மாகாணம், கொழும்பு (குடியியல்)
வழக்கு இல. : HC ( CIVIL) 52/ 2016/ CO
நீதிமன்ற கட்டளைத் திகதி. : 2017.08.11
கோரிக்கை தாக்கல் செய்த திகதி : 2016.09.22
கம்பனியின் கலைப்பாளர் பெயர் : G.J. DAVID
முகவரி : C/O SJMS Associates
Restructure & Corporate Recovery,
Level3, No. 11, Castle Lane,
Colombo 04

9-504/2

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவிற்கமைய, பின்வரும் கம்பனிகள் பின்வரும் பெயர் மற்றும் அதனுடன் தொடர்புடைய தகவல்களுடன் கம்பனிப்பதிவாளர் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.-

கம்பனியின் பெயர்: பிரைம் கெபிடல் ரிசோர்சஸ் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனி இலக்கம் : பீவீ 124542
கம்பனிப் பதிவலுவலகம் : 18 1/4, கொலிங்வுட் பிளேஸ், வெள்ளவத்தை, கொழும்பு 6

கம்பனியின் பெயர்: சினெர்ஜி ஸ்கில்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனி இலக்கம் : பீவீ 125086
கம்பனிப் பதிவலுவலகம் : 910/1, பன்னிப்பிட்டிய வீதி, பத்தரமுல்லை

கம்பனியின் பெயர்: ஜீ.டீ. எக்ரோ புட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனி இலக்கம் : பீவீ 123817
கம்பனிப் பதிவலுவலகம் : இல. 19, பிரதான வீதி, ( துர்கா நெல் ஆலை அருகில்) காஞ்சிரன்குடா, திருக்கோவில் , அம்பாறை

கம்பனியின் பெயர்: கனிஷ்க விக்ரமபால ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனி இலக்கம் : பீவீ 124261
கம்பனியின் பதிவலுவலகம் : 28/1, றொட்ரிகோ காலணி, கல்பொத்த வீதி, நாவல

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கோர்பரேட் "டீ" சொளுடியோ
( பிறைவேட்) லிமிட்டட்
செயலாளர்கள்.

9- 506

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவிற்கமைய பின்வரும் கம்பனிகள் பின்வரும் பெயர் மாற்றம் மற்றும் அதனுடன் தொடர்புடைய தகவல்களுடன் கம்பனிப் பதிவாளர் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.-

கம்பனியின் பெயர்: சமர் விக்டரி (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனியின் புதிய பெயர்: இன்டர்நெஷனல் பொலிடெக்னிக் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனி இலக்கம் : பீவீ 115876
கம்பனிப் பதிவலுவலகம் : இல.10, வின்சன்ட் ஜோசப் மாவத்தை, வத்தளை

கம்பனியின் பெயர்: அப்டபாஸ் லங்கா (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனியின் புதிய பெயர்: சுசிட்க் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனி இலக்கம் : பீவீ 88423
கம்பனிப் பதிவலுவலகம் : 2 ஆம் மாடி, இல. 275, லோட்டஸ் கட்டிடம், நாவல வீதி, நாவல

கம்பனியின் பெயர்: ஸ்ரீ வாஸ்து பில்டிங் கன்ஸ்ட்ரக்ஷன் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனியின் புதிய பெயர்: ஸ்ரீ வாஸ்து பில்டர்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனி இலக்கம் : பீவீ 71643
கம்பனிப் பதிவலுவலகம் : இல.46/12, வெலிகடவத்த வீதி, நாவல வீதி, ராஜகிரிய

கம்பனியின் பெயர்: ஐ ஈ சீ டிவலொப்மன்ட் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனியின் புதிய பெயர்: சீ என் ஈ சீ இன்டநெசனல் என்ஜினியரிங் லங்கா (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனி இலக்கம் : பீவீ 98327
கம்பனிப் பதிவலுவலகம் : இல.513, உயர் நிலை, கங்கொடவில, நுகேகொடை, கொழும்பு

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கோப்பரேட் "டீ" சொளுடியோ
( பிறைவேட்) லிமிட்டட்
செயலாளர்.

9- 507

---

## நொதர்ன் இன்ஸ்டிடியுட் ஒப் டிவெலொப்மென்ட் இனீசியேடிவ்ஸ் (கெரண்டி) லிமிட்டட்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் , கூட்டிணைக்கப்படல் தொடர்பான பகிரங்க அறிவித்தல்

நொதர்ன் இன்ஸ்டிடியுட் ஒப் டிவொலப்மென்ட் இனீசியேடிவ்ஸ் (கெரண்டி) லிமிட்டட் என்ற பெயரில் புதிய கம்பனியொன்று 2017 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 18 ஆந் திகதி GL 2445 என்ற இலக்கத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டுள்ளதென்பதையும், புதிய கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தின் முகவரியானது எம் & என் கட்டிடம் ( 5 ஆம் மாடி), இல.2, டீல் பிளேஸ், கொழும்பு 00300 இல் அமைந்துள்ளது என்பதையும் இத்தால் நாம் பகிரங்க அறிவித்தல் தருகின்றோம்.

பிரணவன் நீலகண்டன்,
பணிப்பாளர்.
என் அன்ட் என் ஏஜென்ஸ் அன்ட்
செக்ரட்டறீஸ் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனியின் கம்பனிச் செயலாளர்கள்.

எம் & என் கட்டிடம்,
( 5 ஆம் மாடி) ,
இல. 2,
டீல் பிளேஸ்,
கொழும்பு 00300

9- 521

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளது.-

கம்பனியின் பெயர் : ட்ராவல் இன்டேல் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவு இலக்கம் : பீ வீ 125198
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2017.08.30
பதிவு அலுவலகம் : 567/2 A, ஹவ்லொக் பாதை, கொழும்பு 6

பினான்சியல் அன்ட் பிசினஸ்
அசோசியேட்ஸ் ( பிறைவேட்) லிமிட்டட்
கம்பனிச் செயலாளர்கள்.

9-532

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ், பின்வரும் வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி 2017 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 14 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட் டுள்ளது.-

கம்பனியின் பெயர் : ஒன்லயின் டக்ஸ் அட்வைசர் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனியின் இலக்கம் : பீ வீ 124651
பதிவு செய்யப்பட்ட அலுவலகம் : இல. 26A/15 A, கெமுனு மாவத்தை, அத்திடிய, தெஹிவளை

கம்பனிச் செயலாளர்.

9-537

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ், கீழ்க் குறிப்பிடப்பட்ட வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி 2017 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 04 ஆந் திகதி கூட்டிணைக் கப்பட்டுள்ளது.-

கம்பனியின் பெயர் : ரன்லாக் எப்பரல் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனியின் இலக்கம் : பீ வீ 124471
பதிவு செய்யப்பட்ட அலுவலகம் : இல. 194/D, பொல்கஹஅண்கஹ, வெலிகல்ல

கம்பனிச் செயலாளர்.

9-538

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவினகீழ், குறிப்பிடப்பட்ட தனியார் கம்பனி கூட்டிணைக் கப்பட்டுள்ளது என அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : மோட்டார் லிங்க் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவு முகவரி : இல. 21, லூசியன் சில்வா மாவத்தை, லுணாவ, மொரட்டுவை
கம்பனியின் இலக்கம் : பீ வீ 121977
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2017.05.02

காட்டர் டீ கொஸ்தா கோர்பரேட்
சேர்விசஸ் ( பிறைவேட்) லிமிட்டட்
கம்பனிச் செயலாளர்.

9-553

---

## கம்பனி பதிவு செய்வதற்கான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவிற்கிணங்க அறிவித்தல்.-

கம்பனியின் பெயர் : ஒலிட் (பிறைவேட்) லிமிட்டட்
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2010.03.03
பதிவு இலக்கம் : பீ வீ 71343
பதிவு முகவரி : இல. 1/171, 4 ஆவது மைல் போஸ்ட் கரந்தெனிய, காலி.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

9-608

---

## கம்பனி பதிவு செய்வதற்கான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவிற்கிணங்க அறிவித்தல்.-

கம்பனியின் பெயர் : நோவா கோர்ப் (பிறைவேட்) லிமிட்டட்
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2017.08.22
பதிவு இலக்கம் : பீ வீ 124942
பதிவு முகவரி : இல. 164/1/1, கஸ்பாவ, பொரலஸ்கமுவ

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

9-609

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவிற்கமைவான அறிவித்தல்.-

கம்பனியின் பெயர்: குர்கன் கெப்பிட்டல் (பிறைவேட்) லிமிட்டட்
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2017.08.08
கம்பனியின் இலக்கம் : பீவீ 124172
பதிவு செய்யப்பட்ட முகவரி : இல. 58, சேர்ச் ஸ்ரீட், தஹோல் போர்ட்,காலி

கே. டீ. ஏ. வீ. விஜயகூன்,
கம்பனிச் செயலாளர்.

9- 628

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவிற்கமைவான அறிவித்தல்.-

கம்பனியின் பெயர்: டேபல் எயிட் (பிறைவேட்) லிமிட்டட்
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2017.08.10
கம்பனிய இலக்கம் : பீவீ 124473
பதிவு செய்யப்பட்ட முகவரி : இல. 16/3A, வூட்லேன்ட்ஸ் அவெனியு, கொஹுவல, நுகேகொடை

கே. டீ. ஏ. வீ. விஜயகூன்,
கம்பனிச் செயலாளர்.

9- 629

---

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

கண்டி, ஹீரஸ்ஸகல வீதி, இலக்கம் 154 இல் வதியும் தே.அ.அ.இல. 681390243 V பதிரென்னெஹெலாகே சுனில் சாந்த ஆகிய என்னால் பிட்டேகம கம்லத் ராலலாகே புலஸ்தி புத்திக கம்லத் அற்றோணித்தத்துவதாரராக நியமனம் செய்து சட்டத்தரணி மற்றும் பிரசித்த நொத்தாரிசு திருமதி ஏ. கே. மானெல் கஜநாயக்க அவர்களினால் இல. 159, 2017, மே மாதம் 30 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட விசேட அற்றோணித்தத்துவம் இன்று தொடக்கம் இரத்துச் செய்யப்பட்டுள்ளதென இலங்கை அரசாங்கத்திற்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

9-458

---

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலக்கம் 209 / பீ, தெல்கமுவ, குருவிட்ட இரத்தினபுரி மாவட்டம் எனும் முகவரியில் வசிக்கும் ( தே.அ.அ.இல. 590761729 V) ஐ உடைய நம்பிகே தொன் சேனாரத்ன தம்மிக ப்ரியன்த ஆகிய நான், குருவிட்ட தெல்கொடயில் வசிக்கும் ( தே.அ.அ.இல. 846433058 V) ஐ உடைய சுப்பையா லக்கி கொலெக்ஷனீ என்பவருக்கு வழங்கப்பட்டதும் 2010, செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதி இரத்தினபுரி புதிய நகரம் இல. 600 என்ற முகவரியில் பிரசித்த நொத்தாரிசு

திரு. ஆலோகா அநுர ஜயசுந்தர என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஊவா, சப்பிரகமுவ வலய பதிவாளர் நாயகத்தின் அலுவலகத்தில் 1163 என்ற இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பெற்றுள்ள விஷேட அற்றோணித்தத்துவமானது 2017, ஓகத்து 22 ஆந் திகதி முதல் அமுலுக்கு வரும் விதமாக இரத்துச் செய்து இல்லாதொழிக்கப்படுகின்றதெனவும் இதன் பின்னர் என் சார்பாக அவர் மேற்கொள்ளும் எவ்வித நடவடிக்கைகளிற்கும் நான் பொறுப்புதாரியல்ல எனவும் மேலும் அறிவித்துக்கொள்கின்றேன்.

நம்பிகே தொன் சேனாரத்ன தம்மிக ப்ரியன்த.

2017.08.22.

9- 500

---

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இரத்தினபுரி மாவட்டம், இல. 290 பீ, தெல்கமுவ, குருவிட்ட என்ற முகவரியில் வசிக்கும் ( தே.அ.அ.இல. 705561958 X ) நம்பிகே தொன் சேனாரத்ன சோபா சீரோனி ஆகிய நான், குருவிட்ட தெல்கமுவவில் வசிக்கும் ( தே.அ.அ.இல. 846433058V) ஐ உடைய சுப்பையா லக்கி கொலெக்ஷனீ என்பவருக்கு வழங்கப்பட்டதும் இரத்தினபுரி, புதிய நகரம் 600 ஆம் இலக்கத்தில் பிரசித்த நொத்தாரிசு திரு. ஆலோகா அநுர ஜயசுந்தர என்பவரினால் 2010, செத்தெம்பர் 03 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1163 ஆம் இலக்கமுடைய விசேட அற்றோணித்தத்துவமானது 2017, ஓகதது 22 ஆந் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இரத்துச் செய்து இல்லாதொழிக்கப்படுகின்றதெனவும் இதன் பின்னர் என் சார்பாக அவர் மேற்கொள்ளும் எவ்வித நடவடிக்கைகளிற்கும் நான் பொறுப்பு தாரியல்லவென மேலும் அறிவித்துக் கொள்கின்றேன்.

நம்பிகே தொன் சேனாரத்ன சோபா சீரோனி .

2017.08.22.

9- 501

---

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

அநுராதபுரம் இரண்டாம் படிவம், அக்போபுர, 11 ஆம் ஒழுங்கை, இல. 528/17 ஐக் கொண்ட இடத்தில் வதியும் யோதகே அனுர குமார விஜய பண்டார ஆகிய என்னால் இல. 528/17, அக்போபுர, 11 ஆம் ஒழுங்கை , இரண்டாம் படிவம் அநுராதபுரத்தில் வதியும் கொணகலகல மெத்தவத்த, குசும் ஜயலதா ஆகிய நபருக்கு வழங்கப்பட்ட 2007.04.24 ஆந் திகதியுடைய இல. 203 கொண்ட எச். எம். சரத் விஜயரத்ன சட்டத்தரணி அவர்களினால் அத்தாட்சிப் படுத்தப்பட்ட அற்றோணித்தத்துவம் இப்போது தொடக்கம் இரத்துச் செய்யப்படுகின்றது என அனைவருக்கும் இத்தால் அறியத் தருகின்றேன்.

யோதகே அனுர குமார விஜய பண்டார.

9-524

### விசேட அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

தெவிநுவர, கல்கணே வீதி, இலக்கம் 37 என்ற முகவரியில் வசிக்கும் வாசுலநந்த ரன்படபென்திகே ஆகிய நான், தெவிநுவர, பியரத்னவீதி, "ஶ்ரீ காந்த" என்ற முகவரியில் வசிக்கும் அருணா வனதினி விஜேஸேகர என்பவருக்கு வழங்கியதும் ஜேர்மனி பர்லின் நகரில் அமைந்துள்ள இலங்கைத் தூதரகத்தில் முதலாம் செயலாளரினால் 2010, யூன் மாதம் 24 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட விசேட அற்றோணித்தத்துவமானது பதிவாளர் நாயகம் திணைக்களத்தில் காலி வலய அலுவலகத்தில் 22 ஆம் புத்தகத்தில் 40 ஆம் பக்கத்தில் 894 என்ற இலக்கத் திகதியிடப்பட்ட பதிவுசெய்யப்பட்டதுமான விசேட அற்றோணித்தத்துவமானது இரத்துச் செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்படுகின்றதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் அதன் பொது மக்களிற்கும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன். அந்த அற்றோணித்துவப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தத்துவதாரியால் இத்தினத்திற்குப் பின்னர் எனக்காகச் செய்யப்படுகின்ற செயல்பாடுகள் அல்லது கொடுக்கல் வாங்கல்கள் சம்பந்தமாக எவ்விதப் பொறுப்புக்களையும் ஏற்றுக் கொள்ளமாட்டேன் என்பதையும் இத்தால் அறியத்தருகின்றேன்.

கயா ஆதரீ ரன்படபெதிகே.

2017.09.11.

9-533

---

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

தெவிநுவர, பியரத்ன வீதி, "ஶ்ரீகாந்த " என்ற முகவரியில் வசிக்கும் கயா ஆதரீரன் படபென்திகே ஆகிய நான், தெவிநுவர, பியரத்ன வீதி, "ஶ்ரீகாந்த" என்ற முகவரியியல் வசிக்கும் அருணா வனதினி விஜேஸேகர என்பவருக்கு வழங்கியதும் மாத்தறை மாவட்ட பிரசித்த நொத்தாரிசு திருமதி மெத்னி சிறிவர்தன அவர்களால் 1997, யூலை மாதம் 30 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 88 ஆம் இலகக் விசேட அற்றோணித்தத்துவமானது கொழும்பு பதிவாளர் நாயகம் திணைக்களத்தில் 178 ஆம் புத்தகத்தில் 185 ஆம் பக்கத்தில் 5538 என்ற இலக்க திகதியிடப்பட்டு பதிவுசெய்யப்பட்டதுமான விசேட அற்றோணித்தத்துவமானது இரத்துச் செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்படுகின்றதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் அதன் பொது மக்களிற்கும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன். அந்த அற்றோணித் தத்துவப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தத்துவதாரியால் இத்தினத்திற்குப் பின்னர் எனக்காகச் செய்யப்படுகின்ற செயல்பாடுகள் அல்லது கொடுக்கல் வாங்கல்கள் சம்பந்தமாக எவ்விதப் பொறுப்புக்களையும் ஏற்றக்கொள்ளமாட்டேன் என்பதையும் இத்தால் அறியத் தருகின்றேன்.

கயா ஆதரீ ரன்படபெதிகே.

2017.09.11.

9-534

### விசேட அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

பாணந்துறை, வட்டபொல, வேதமாவத்தை, இல. 1C அலாபிச்சை மரிக்கர் சபீக் ஆகிய நான், மன்னார் உப்புக்குளம் முகவரியில் வசிக்கும் சேகு இப்ராஹிம் மொஹமட் ரபீக் என்பவருக்கு என்னால் வழங்கப்பட்ட 2007 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 19 ஆந் திகதி மன்னார் பிரசித்த நொத்தாரிசு செபமாலை செபஸ்டியன் லோகு முகதாவில் இல. 0564 ஆம் இலக்கத்தில் முடிந்த விசேட அற்றோணித் தத்துவப்பத்திரம் இத்தால் இரத்துச் செய்யப்படுவதுடன் குறித்த விசேட அற்றோணித்தத்துவம் இரத்துச் செய்யப்பட்டு வறிதாக்கப்படுகின்றது.

அலாபிச்சை மரிக்கர் சபீக்.

9-552

---

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் கொச்சிக்கடை மேற்கு, பலங்கத்துறை, புனித அந்தோனி ஒழுங்கை, இலக்கம் 32 இல் வதியும் வர்ணகுலசூரிய நிமன்த சிதார கோசில பீரிஸ் ஆகிய நான், சந்தரெஸ் ஐ றொட்ரிகோ பிரசித்த நொத்தாரிசு அவர்களினால் 2016 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 12 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட இலக்கம் 3914 கொண்ட விசேட அற்றோணித்தத்துவத்தினால் நீர்கொழும்பு, மீரிகம வீதி, 140/15 இல் வதியும் பர்னபஸ் இகஸன் விக்டோரியா என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவம் இரத்துச் செய்யப்பட்டுள்ளதென இத்தால் அறியத்தருகின்றேன்.

வர்ணகுலசூரிய நிமன்த சிதார கோசில பீரிஸ் .

9-630

---

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வத்தளை, ஹெந்தளை, அவரகொட்டுவ, 25 ஆம் ஒழுங்கை, இலக்கம் 04 இல் வதியும் நாதன் மலர்விழி ஆகிய நான், சந்தரெஸ் ஐ. றொட்ரிகூ பிரசித்த நொத்தாரிசு அவர்களினால் 2015 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 25 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட இலக்கம் 3693 கொண்ட விசேட அற்றோணித் தத்துவத்தினால் நீர்கொழும்பு, மீரிகம வீதி, 142/05 இல் வதியும் மொஹமட் இஸதீன் மொஹமட் சியாவுதீன் என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித்தத்துவம் இரத்துச் செய்யப்பட்டுள்ள தென இத்தால் அறியத்தருகின்றேன்.

நாதன் மலர்விழி.

9-631

---

## ஏல விற்பனைகள்

### டீஎப்சீசீ வங்கி பீஎல்சீ

( டிஎப்சீசீ வர்தன வங்கி பீஎல்சீயின் பதிலாள்)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான விற்பனை*

**பெறுமதிமிக்க சொத்து ஏல விற்பனை**

***1718 ஆம் இலக்க பிணை உறுதி மூலம் அடகு வைக்கப்பட்ட உடைமைகளின் விபரம்.-***

***மேல் மாகாணம்,கொழும்பு மாவட்டம், பாமன்கட பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கொழும்பு மாநகர எல்லைக்குள், பாமன்கட மேற்கு கிராம அலுவலர் பிரிவில் , பாமன்கட, மேல் பிரிவு, 46 ஆம் வட்டாரத்தில் அமைந்துள்ள, இல. 104/5/6, மெனிங் பிளேஸ், வெள்ளவத்தை என்னும் முகவரியைக் கொண்ட அனுமதிப்பத்திரம் பெற்ற நில அளவையாளர் பி.சின்னத்தம்பி அவர்களால் வரையப்பட்ட 1996 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 07 ஆந் திகதியிடப்பட்ட 5760 ஆம் இலக்க அடுக்குமாடி வரைபடத்தின், 38 ஆம் இலக்க இல்லம் ( 5 ஆவது மாடி) எனக் குறிக்கப்பட்ட பிரிக்கப்பட்டதும், வரையறுக்கப்பட்டதுமான வீடு மற்றும் அதிலுள்ள மண்டபம், உணவு உட்கொள்ளும் அறை, இரண்டு படுக்கை அறைகள், சமையலறை , மலசலகூடம், தண்ணீர் வசதிகள் உட்பட மாடி முகப்புடன்***

**காணியின் விஸ்தீரணம்:**

***ஐம்பத்துஆறு தசம் ஐந்து ஏழு சதுர மீற்றர் நிலப்பரப்பு ,(56.57 சதுர மீற்றர் அதாவது 609 சதுர அடி மற்றும் அதிலுள்ள அனைத்தும் அடங்கலாக***

பண்டாரவளை பிரசித்த நொத்தாரிசு கென்னத் கொட்வின் டி சில்வா அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட, 2015 ஆம் ஆண்டு மே மாதம் 06 ஆந் திகதியிடப்பட்ட 1716 மற்றும் 1718 ஆம் இலக்க பிணை உறுதிகள் மூலம் பண்டாரவளையைச் சேர்ந்த பொன்னுத்துரை ராஜேந்திரன், ராஜேந்திரன் சுகந்தன், ராஜேந்திரன் கொகிலவதி மற்றும் ராஜேந்திரன் சுதர்ஷன் ஆகியோரால் டிஎப்சீசீ வங்கி பீஎல்சீக்கு ( டிஎப்சீசீ வர்தன வங்கி பீஎல்சீ யின் பதிலாள்) க்கு அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத சொத்து.

டிஎப்சீசீ வங்கி பீஎல்சீயினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2017ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 10ஆந் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப.11.00 மணிக்கு எம்மால் ஸ்தலத்தில் பகிரங்க ஏலவிற்பனைக்கு விடப்படும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.-** ஏலவிற்பனையில் வெற்றி பெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும் :-

